# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 16.03.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் தப்லீக் தொடர்பான சம்பவங்கள், அது தொடர்பான அவர்களது அனுபவங்களை எடுத்து கூறினேன். சில சம்பவங்கள் எஞ்சியுள்ளன. அவற்றை பிறகு கூறுவேன் என்று நான் கூறியிருந்தேன். அதை நான் இன்றே எடுத்துக் கூறுகின்றேன். ஏற்கனவே நான் பலமுறை கூறியிருப்பது போன்று இந்த சகாபாக்களுக்காக நாம் துஆ செய்ய வேண்டும். இந்த சஹாபாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்று கொண்டார்கள். நம்மை இந்த அருட்கொடைகளில் பங்கு பெறுபவர்களாக அவர்கள் ஆக்கியுள்ளார்கள். அல்லாஹ் இவர்கள் எல்லோரது தகுதிகளையும் உயர்த்தி கொண்டே செல்வானாக. இவர்கள் இதனை நமக்காக செய்யாமல் இருந்திருந்தால் அல்லாஹ் இறக்கியுள்ள இந்த அருட்கொடையிலிருந்து நாம் புறக்கணிக்கப்பட்டவர்களாக ஆகியிருப்போம்.

இரண்டாவதாக அவர்களது நன்மைகள், ஈமான் விஷயத்தில் அவர்களுக்கிருந்த தைரியம், மார்க்கத்திற்காக அவர்களிடம் இருந்த தன்மான உணர்வு, மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கு அவர்களிடம் இருந்த உணர்வு ஆகியவை அவர்களது சந்ததிகளிலும் அவர்களது அந்த ஆன்மாவை ஊதும் வகையில் இருக்க வேண்டும்.நேரடியாக அவர்களுடன் இரத்த உறவு உடையவர்களாக இல்லாமல் இருந்தாலும் ஓர் ஆன்மீக உறவை அவர்களுடன் வைத்திருப்பவர்களும் உள்ளனர். இந்த தொடர்பின் காரணமாக இவர்கள் தங்களுக்குள்ளும் ஒரு உணர்வையும் எழுச்சியையும் உருவாக்கி அந்த சான்றோர்களின் உணர்வுகளையும் உள்ளத்தின் துடிப்பையும் தொடர்ந்து நிலைத்திருக்கும்படி செய்யக்கூடியவர்களாக இவர்கள் திகழ வேண்டும். இந்த அருளை இவர்கள் தங்களது சந்ததிகளிலும் தொடர்ந்து நீடித்திருக்கும்படி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் இந்த பெரியவர்கள் செய்த பேருபகாரத்திற்குரிய உரிமையை செலுத்த முடியும். பலரும் எனக்கு எழுதுகின்றனர். சந்திக்கும் போது என்னிடம் கூறவும் செய்கின்றனர். அதாவது இந்த பெரியவரைப் பற்றி நீங்கள் கூறினீர்கள், இந்த சான்றோருடன் எனக்கு இந்த வகையில் உறவு இருக்கின்றது. அவர் எனது உறவினர் என்று கூறுகின்றனர். ஆனால், இந்த சான்றோர்களின் அடிச்சுவட்டை பின்பற்றி செல்வதன் மூலமாகத்தான் இந்த உறவுக்குரிய உரிமையை நாம் செலுத்த முடியும் என்பதை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும்.

எனவே இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கான உணர்வையும், அதற்காக முயற்சி செய்வதையும் எப்போதும் நாம் நமக்கு முன்னால் வைத்திருக்க வேண்டும்.

இன்று நான் கூறப்போகும் சம்பவங்களில் முதல் அறிவிப்பானது ஹஸ்ரத் மியான் ஜமாலுத்தீன் சாஹிபுடையதாகும். அவர்கள் கூறுகின்றார்கள்.

நவாப்தீன் கவ்மரைன் என்ற பெயருடைய ஒரு மவ்லவி அமிர்தசரஸ் மாவட்டத்திலுள்ள இத்ரீஸ் என்ற ஊரில் உள்ளவர். இவர் நான் மிர்ஸாயிகளை சீர்திருத்துகிறேன் என்று அறிவித்தார். கிராமம் கிராமமாக ஊர் ஊராக சுற்றி வந்தார்.

கூறுகின்றார்கள்: எனது வீட்டிற்கு அருகிலுள்ள நவான்பிண்ட் என்ற பெயரில் புகழ்பெற்ற தாராகட் என்ற இடத்திற்கு இவர் வந்து கூச்சலிட ஆரம்பித்தார். மிர்ஸாயி எவராவது இருந்தால் அவர் என் முன்னால் வரட்டும் என்றார். அறிவிப்பாளர், எனக்கு முன்பு இந்த கிராமத்தில் எந்த அஹ்மதியும் இருக்கவில்லை. எல்லாரும் எதிரிகளாகவே இருந்தனர். எனக்கு தெரிந்த நபர்களில் ஒரு சிலர் ஆலோசனை செய்து ஒரு நபரை என்னிடம் அனுப்பி வைத்தார்கள். நான் இந்த இடத்தில் வைத்து மவ்லவிகளை எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காக அவரை அனுப்பி வைத்தனர். இவர்கள் வசித்து வந்த கிராமமும் பக்கத்தில்தான் இருந்தது.

கூறுகின்றார்கள்: நான் சிந்தித்துப் பார்த்தேன். இந்த மக்கள் வேடிக்கைப் பார்க்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். உண்மையைப் புரிய வேண்டும் என்ற நோக்கம் கொஞ்சமும் இவர்களுக்கு இல்லை. கடைசியாக குழப்பம்தான் மிஞ்சும். எனவே, விவாதங்களில் ஈடுபடுவதிலிருந்தும் ஹஸ்ரத் சாஹிப் தடை செய்துள்ளார்கள் என்று நான் கூறினேன். விவாதங்களில் ஈடுபடுவதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தடை செய்யக்கூடிய காலக்கட்டமாக அது இருந்தது. ஏனென்றால், மவ்லவிமார்களுக்கு இதனால் எந்த தாக்கமும் ஏற்படுவதில்லை.

கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் சாஹிப் விவாதங்களில் ஈடுபடுவதை தடை செய்துள்ளார்கள். எனினும் அவர்களுக்கு இதில் அதிகம் ஆர்வம் இருக்கின்றது என்றால் குழப்பம் ஏற்படாது என்பதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டால் நாங்கள் உங்கள் கிராமத்திற்கு வருவோம் என்று நான் கூறினேன். மேலும் மவ்லவி சாஹிபிற்கு இருக்கும் ஆட்சேபனைகளை ஒருமுறை அவர் தெரிவிக்க வேண்டும். விவாதங்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக நாங்கள் அவரது ஆட்சேபனைகளுக்கு ஒருமுறை பதில் கூறுவோம். மக்கள் தாமாகவே முடிவு எடுத்துக் கொள்வர். அல்லது நாங்கள் எங்கள் கிராமத்து மக்களால் குழப்பம் ஏற்படாது என்பதற்கு பொறுப்பேற்கிறோம். மவ்லவி சாஹிப் இங்கு வர வேண்டும் என்று நான் அவர்களுக்கு செய்தி அனுப்பினேன். அந்த நபர் இந்த தூதுச் செய்தியை தனது கிராமத்து மக்களுக்கு கொண்டு சேர்த்தார். நான் குறிப்பிட்ட இந்த மவ்லவி 3 நபர்களை அழைத்துக் கொண்டு வேறொரு வழியாக எங்கள் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அந்த கிராமத்திலுள்ள ஊர் தலைவரை சந்தித்தார். அவர் இந்துவாக இருந்தார். அவரிடம் இங்கு மிர்ஸாயீ யாராவது இருந்தால் அவரை என்னை எதிர்கொள்ள வையுங்கள் என்று கூறினார். ஊர்த்தலைவர் என்னை அழைத்து வருவதற்காக ஒரு நபரை என்னிடம் அனுப்பி வைத்தார். முன்பே இதுபற்றிய செய்தி எனக்கு கிடைத்ததும் நான் எனது கருணைமிக்க இறைவனிடம் துஆ செய்தேன். இறைவா! நான் அறிவற்றவனும் சக்தியற்றவனும் ஆவேன். எனது சிறப்புகளில் எனக்கு எவ்வித கர்வமும் இல்லை. முழுக்க முழுக்க உன்னுடைய அருளே தேவைப்படுகின்றது. உண்மையை நீயே தெளிவுபடுத்தவாயாக! என்று துஆ செய்து விட்டு எங்கு மவ்லவி இருந்தாரோ நான் அங்கு வந்தேன். பல இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று திரண்டிருந்தனர். உட்காருவதற்கான விரிப்பு விரிக்கப்பட்டது. நானும் மவ்லவியும் நடுப்பகுதியில் அமர்ந்தோம். சிறிது நேரம் அமைதி நிலவியது. பிறகு நான் மவ்லவி சாஹிப் எந்த விஷயத்திற்காக நீங்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளீர்கள்? என்று கேட்டேன். அதற்கு மவ்லவி சாஹிப் முஹம்மதிய உம்மத்தில் பெரும் பிரிவினை ஏற்பட்டு விட்டது. நான் அதை சீர் செய்வதற்காக சுற்றி வருகின்றேன் என்று கூறினார்.

கூறுகின்றார்கள்: நான் அவரிடம் இன்று வரை நீங்கள் எந்த அளவு சீர்திருத்தம் செய்துள்ளீர்கள் என்று கேட்டேன். ஆலிம்களிடமிருந்து மார்க்கப் பெரியார்களிடமிருந்தும் நீங்கள் சீர்திருத்தவாதியாக இருக்கின்றீர்கள் என்பதை எடுத்துக் காட்டும் எத்தனை சான்றிதழ்களைப் பெற்றுள்ளீர்கள்? என்று கேட்டேன். அதற்கு மவ்லவி ஆம், நான் அவற்றைப் பெற்றுள்ளேன் என்று கூறினார். அதற்கு நான் பிறகு அச்சான்றிதழ்களை எனக்கு காட்டுங்கள் என்று கூறினேன். அதற்கு மவ்லவி சாஹிப் நான் அவற்றை எனது கிராமத்தில் வைத்து விட்டு வந்துள்ளேன் என்று கூறினார். பிறகு அவசரமாக எனது அசல் நோக்கம் மிர்ஸா குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார். அவர் காஃபிராக இருக்கின்றார். மக்களையும் காஃபிராக்குகின்றார். நவூதுபில்லாஹ். எனவே நான் இது போன்ற மக்களுடன் விவாதம் செய்து வருகிறேன் என்று கூறினார். அதற்கு நான் அவர் காஃபிர் ஆவதற்கான காரணத்தைக் கூறுங்கள். மேலும் எந்த விஷயம் தொடர்பாக நீங்கள் விவாதம் செய்யப் போகின்றீர்கள் என்பதையும் கூறுங்கள் என்று கூறினேன். அதற்கு மவுலவி சாஹிப் நீங்கள் உர்துவில் பேசுகின்றீர்கள். நான் அரபியில் உரையாடுவேன் என்று கூறினார். அதற்கு நான் என்னால் அரபியில் பேச முடியாது. எனவே, நாம் பஞ்சாபியில் பேசுவோம் என்றேன். அதற்கு மவுலவி சாஹிப் நல்லது. பஞ்சாபியிலேயே பேசுவோம் என்று கூறினார். மிக நல்ல விஷயம் என்று நான் கூறினேன். மவுலவி சாஹிப் உங்களது மத்ஹபு எது? என்று கூறுங்கள் என்றார். அதற்கு நான் முதலில் நீங்கள் உங்களது மத்ஹபு எது? என்று கூறுங்கள் என்று கேட்டேன். மவுலவி சாஹிப் எனது மத்ஹபு ஹனபியாகும். நான் இறைவன் ஒருவனே அவனுக்கு இணையில்லை என்பதை அறிந்துள்ளேன். முஹம்மத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உண்மையாளர் என்று நான் ஏற்று கொண்டிருக்கின்றேன். மேலும் திருக்குர்ஆனின் 20 வசனங்களின்

அடிப்படையிலும், ஸஹிஹான ஹதீஸ்களின் அடிப்படையிலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இந்த உடலுடன் நாலாவது வானத்தில் உயிருடன் இருப்பதாக நான் நம்புகின்றேன். இதை மறுப்பவரை நான் காபிர் என்று கருதுகின்றேன். நான் படித்தவன். சான்றிதழ் பெற்றவன் என்று கூறிவிட்டு இப்போது நீங்கள் உங்களது மத்ஹபு எது என்பது பற்றியும் கூறுங்கள் என்று கூறினார்.

அதற்கு இந்த எளியவன், நான் இறைவன் ஒருவனே என்றும் அவனுக்கு இணையில்லை என்றும் அறிந்துள்ளேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீனாக இருக்கின்றார்கள் என்பதை நான் ஏற்றுக் கொண்டுள்ளேன். இஸ்ரவேல் சந்ததிகளுக்காக வந்த ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் அடிப்படையில் இறந்துவிட்டார் என்று நான் நம்புகின்றேன். வரவேண்டிய மஹ்தியான ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இந்த உம்மத்திலிருந்து வரவேண்டும். இப்போது தான் மஹ்தி என்றும் மஸீஹ் என்றும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிபு அவர்கள் வாதம் செய்துள்ளார்கள். உண்மையன உள்ளத்துடன் அவர் உண்மையாளர் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். யார் அவரை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர் உண்மையில் இருக்கின்றார் என்று நான் கருதமாட்டேன். எனது அறிவுக்கான எந்த சான்றிதழும் என்னிடம் இல்லை. (அதாவது எனது மார்க்க அறிவிற்கான எந்த சான்றிதழும் என்னிடம் இல்லை) நானே விஷயங்களைப் படித்துள்ளேன். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நட்பின் தாக்கத்தை என்னிடம் வைத்துள்ளேன். இஸ்ரவேல் சந்ததிகளுக்காக தோன்றிய இப்னுமர்யம் திருக்குர்ஆனின் தெளிவான வசனங்கள் அடிப்படையிலும் முத்தஸில் மர்ஃபூ ஹதீஸ்களின் அறிவிப்புகளின் தொடர் முறையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை சென்றடைகின்றதோ அவற்றின் அடிப்படையிலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இந்த பௌதீக உடலுடன் நான்காவது வானத்தில் ஏறி சென்றுள்ளார் இன்று வரை அங்கு உயிருடன் இருக்கின்றார் என்பதை நிருபித்துவிட்டால் நான் தவ்பா செய்ய தயாராக இருக்கின்றேன் என்று நான் உறுதி கூறுகின்றேன் என்று நான் மவுலவி சாஹிபிடம் கூறினேன். அதற்கு மவுலவி சாஹிப் நல்லது. பிறகு நீங்கள் ஏற்று கூறியிருக்கும் இந்த விஷயத்தை எழுதி அதில் கையெழுத்திட்டு தாருங்கள் என்று கேட்டார். நான் பேனாவும் காகிதமும் கேட்டு நான் கூறியவற்றை எழுதி அதில் கையெழுத்திட்டு மவுலவி சாஹிபிடம் கொடுத்தேன். மவுலவி சாஹிப் அந்த காகிதத்தை தனது கைகளால் பெற்று கொண்டு தப்ஸீர்களை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? என்று கேட்டார் அதற்கு நான் எந்த தப்ஸீர்கள் திருக்குர் ஆனுக்கும் ஸஹிஹான ஹதீஸ்களுக்கும் பொருத்தமாக இருக்கின்றதோ அவற்றை நான் ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறினேன். மவுலவி சாஹிப் திருக்குர்ஆன் உனக்கு தெரியுமா? என்று கேட்டார். அதற்கு நான் ஆம் தெரியும் என்றேன். பிறகு மவுலவி சாஹிப் குர்ஆன் என்பதன் பொருள் என்ன? என்று கேட்டார். இவர் விவாதம் செய்ய விரும்புகிறார் என்று எனக்கு தெரியும் அதனால் அதற்கு நான் இது பற்றி நான் கூறமாட்டேன். முதலாவதாக நாம் முதலில் பேசிய விஷயம் தொடர்பாக ஒரு முடிவுக்கு வருவோம் என்று மவுலவி சாஹிபிடம் கூறினேன். மவுலவி சாஹிப் ஸாலிகல் கிதாபு என்பதன் பொருள் என்ன? என்று கேட்டார்.

அதற்கு நான், இதற்கு நான் பதில் கூறமாட்டேன். எந்த விஷயம் தொடர்பாக பேசுவதற்கு நாம் வந்துள்ளோமோ அது சம்பந்தமான கேள்விகளை கேளுங்கள். ஆட்சேபனைகளை எடுத்து வையுங்கள் என்று கூறினேன். மவுலவி சாஹிப் திருக்குர் ஆனில் எத்தனை வசனங்கள் உள்ளன? என்ற தனது அடுத்த கேள்வியை கேட்டார். அதற்கு நான் மீண்டும் மீண்டும் நீங்கள் இதே விஷயங்களையே கூறிக் கொண்டிருக்கின்றீர்களே என்றேன். உங்களுக்கு குர்ஆன் தெரியும் என்பதை எப்படி தெரிந்து கொள்வது? என்று மவுலவி சாஹிப் கேட்டார். அதற்கு இறைவனருளால் உங்களைவிட சிறப்பாக குர்ஆன் எனக்கு தெரியும். நீங்கள் கேட்கும் கேள்விக்கு இதே சபையில் அமர்ந்தவாறு நான் பதில் கூறுவேன் என்பதை இறைவன் மீது ஆணையிட்டு கூறுகின்றேன். ஆனால் வீண் வாதங்களை நான் செய்யமாட்டேன் என்று நான் கூறினேன். முன் சென்று போன சான்றோர்களின் தப்ஸீர்களையும், கலீஃபாக்களின் கூற்றுகளையும் நீங்கள் ஏற்று கொள்வதில்லையா? என்று மவுலவி சாஹிப் கேட்டார்.அதற்கு நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவற்றை ஏற்று கொள்கிறேன். ஹஸ்ரத் அபூபக்கர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோரின் கூற்றுகளை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அலைக்கும் பி சுன்னத்தி வபி சுன்னத்தில் குலஃபாயீ ராஸிதீனல் மஹ்திய்யின். (எனது நடைமுறையைப் பின்பற்றுவதும் நேர்வழி பெற்ற எனது கலீஃபாக்களின் நடைமுறையைப் பின்பற்றுவதும் உங்கள் மீது கடமையாகும்) என்ற அவர்களது கருத்துதான் எனது கருத்தாகும். நீங்களோ இந்த நான்கு கலீஃபாக்களுடன் கிலாஃபத்தை ஒரு எல்லைக்குட்பட்டதாக ஆக்கிவிட்டீர்கள். நாங்கள் மிர்ஸா ஸாஹிபை கலீஃபத்துல்லாஹ்வாக அல்லாஹ்வின் பிரதிநிதியாக நம்புகின்றோம். அவர்களது வழிமுறையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சுன்னத்தாக நாங்கள் கருதுகின்றோம். சுருக்கமாக, மவுலவி சாஹிப் இவ்வாறு அங்குமிங்கும் பேசியவாறு அரைமணி நேரத்தை கழித்துவிட்டார்.

திருக்குர்ஆனை தப்ஸீரில்லாமல் புரிய முடியாது என்று மவுலவி சாஹிப் கூறினார். நான் அவரிடம் இது தவறாகும். தப்ஸீர்கள் மூலம் மட்டும்தான் திருக்குர் ஆனை புரிய முடியும் என்றால் தப்ஸீர்களின் தொடர் இல்லாமல் நின்று போய்விட்டால் திருக்குர்ஆனை புரிந்து கொள்ள முடியாதே! இறைவன் இதனை ஏற்று கொள்ளவில்லை.

*நாம் குர்ஆனை எளிதானதாக ஆக்கியுள்ளோம்* என்று திருக்குர்ஆன் வாதம் செய்கிறது.

*அவர்கள் குர்ஆனை சிந்தனை செய்து பார்ப்பதில்லையா?* என்று அது கேட்கிறது.

எதன் தேவையும் திருக்குர்ஆனுக்கு இல்லை என்று கூறினேன். மவ்லவி சாஹிப் அசல் விஷயத்தின் பக்கம் வரவில்லை. இறுதியில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இந்த பௌதீக உடலுடன் வானத்தில் ஏறிச் சென்றிருப்பதை குறிப்பிடுகின்ற திருக்குர்ஆன் வசனங்களை எடுத்துக் கூறுங்கள் என்று அந்த கிராமத்தின் தலைவர் கூறினார். அதற்கு மவ்லவி சாஹிப் கிராமத்தின் தலைவர் அவர்களோ, நான் திருக்குர்ஆன் வசனத்தை எடுத்துக் கூறுவேன். ஆனால், இவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று கூறினார். அதற்கு கிராமத்தின் Chief அவர்கள் மவுலவி சாஹிப் இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் மற்ற மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கூறினார். மவுலவி சாஹிப் பிறகு வேறு வழியில்லாமல் ஆனதும் திருக்குர் ஆனை கொண்டு வாருங்கள் என்று கூறினார். அப்போது டில்லியில் அச்சிட்டு வெளியிடப்பட்ட மொழியாக்கம் செய்யப்பட்ட திருக்குர்ஆன் ஒன்று கொண்டு வரப்பட்டு அது மவுலவி சாஹிபின் கையில் கொடுக்கப்பட்டது. அதை கையில் வாங்கியதும் இது மிர்ஸாவின் குர்ஆனாகும் என்று மவுலவி சாஹிப் கூறினார். பிறகு நான் ஒருபோதும் இது மிர்ஸா ஸாஹிபின் குர்ஆன் அல்ல. கண்களை திறந்து பாருங்கள் என்று கூறினேன். மவுலவி சாஹிப் மீண்டும் தான் கூறியதையே திரும்ப கூறினார். அதற்கு பிறகு நான் லஃனதுல்லாஹி அலல் காஸிபீன் என்று கூறினேன். இவ்வாறு மூன்று முறை நான் கூறினேன்.

மவுலவி சாஹிப் திருக்குர்ஆனை தனது கையில் வாங்கி அதில் இருந்த அச்சகத்தின் பெயரை பார்த்தார். பிறகு இதை எழுதியவர் யார்? என்று கேட்டார். அதற்கு நான் நஊதுபில்லாஹ் நீங்கள் இதை இறைவனின் வசனங்களாக ஏற்றுக் கொள்ளவில்லையா? அதனால்தான் எழுதியவர் யார் என்று கேட்கின்றீர்களா என்றேன். அதற்கு மவுலவி சாஹிப் இல்லை இல்லை. எனக்கு தவறு ஏற்பட்டு விட்டது என்று கூறினார். பிறகு இதனை தொகுத்தவர் யார்? என்று கேட்டார்.

அதற்கு நான் மவுலவி சாஹிப் உணர்வுடன் செயல்படுங்கள். நீங்கள் கூறுகின்ற கருத்தை நிரூபிக்கும் வசனங்களை நீங்களே எடுத்து காட்டுங்கள் என்று கூறினேன். பிறகு மவுலவி சாஹிப் திருக்குர்ஆனைத் திறந்து அதன் பக்கங்களை புரட்டிக் கொண்டே இருந்தார். 20 நிமிடங்கள் வரை பக்கங்களைப் புரட்டி கொண்டே இருந்தார். வசனம் எதுவும் அவருக்கு கிடைக்கவில்லை. பிறகு நான் மவுலவி சாஹிபிடம் நீங்கள் கூறும் விஷயத்தை நிரூபிக்கின்ற 20 குர்ஆன் வசனங்கள் இருப்பதாக கூறினீர்கள். ஒன்றில்லையென்றால் இரண்டாவது வசனத்தை காட்டுங்கள். இரண்டாவது இல்லையென்றால் மூன்றாவது வசனத்தை காட்டுங்கள் என்று கூறினேன். மவ்லவி சாஹிபிற்கு குர்ஆனிலிருந்து அந்த வசனங்கள் கிடைக்கவில்லை. இறுதியில் மவ்லவி சாஹிப் எனக்கு குர்ஆனிலிருந்து அந்த வசனங்கள் கிடைக்கவில்லை. ஆனால் நான் மனனம் செய்துள்ள வசனத்தை கூறுகின்றேன் என்றார். பிறகு மவ்லவி சாஹிப், அல்லாஹ், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் கூறிய *3:56* வசனத்தை ஓதிவிட்டு அதற்கு இவ்வாறு பொருள் கூறினார். *நான் உனது ரூஹை அதன் முழுமையான உடலுடன் சேர்த்து வானத்திற்கு உயர்த்திக் கொள்வேன். (3:56)*

அதற்கு நான், மவ்லவி சாஹிப், திருக்குர்ஆனிலிருந்து அந்த வசனத்தை எடுத்துக் காட்டுங்கள். அதன் சொற்களை நேரடியாகப் பார்த்து அவற்றை நம் முன் வைத்து விவாதிக்கலாம் என்று நான் கூறினேன்.

மவ்லவி சாஹிப் குர்ஆனை கையில் வாங்கினார். பிறகு 10 நிமிடங்கள் வரை அதன் பக்கங்களைப் புரட்டி கொண்டிருந்தார். எந்த வசனமும் அவருக்கு கிடைக்கவில்லை. மக்கள் அவரை ஏளனமாகப் பேசத் தொடங்கினார்கள். உங்களது திருக்குர்ஆன் அறிவு மீது எங்களுக்கு வியப்பாக இருக்கின்றது. ஒரு பிரசித்தி பெற்ற குர்ஆன் வசனம் உங்களுக்கு தெரியவில்லையே! என்று கூறி மக்கள் அவரை கேலி செய்தவாறு அங்கிருந்து எழுந்து சென்றார்கள். இதே போன்று ஒரு சம்பவத்தைக் கடந்த முறை நான் கூறினேன். ஆனால் அது வேறு சம்பவமாகும். பொதுவாக இதுதான் தங்களை ஆலிம்கள் என்று கூறிக்கொள்கின்ற இந்த பெயர்தாங்கி ஆலிம்களின் பழக்கமாகும்.

**பிறகு ஹஸ்ரத் முன்ஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹகிம் முஹம்மது அலி சாஹிப் ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தில் அரசவை மருத்துவராக இருந்து வந்தார். இவருக்கு ஓய்வூதியம் கிடைத்த காலத்தில் இவர் லாஹூரில் வசித்து வந்தார். நான் அவரிடம் வேலை பார்த்து வந்தேன். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்த்து வந்தார். மிக தீய சொற்களை கூறி வந்தார். அவர் உரையாடிக் கொண்டிருந்த சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உயர் தகுதிக்கு எதிராக தன்மானமிழந்தவர் என்ற சொல்லை பயன்படுத்தினார். நான் இரவு மிக அதிகமாக துஆ செய்தேன். இஸ்திக்ஃபார் செய்தேன். இவ்வளவு அவமரியாதையாக நடந்து கொண்ட இந்த நபருடன் நான் ஏன் பேசினேன்? என்று எண்ணி வருந்தினேன். அப்போது இறைவன் எனக்கு கனவில் காட்டினான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மர்ஹூம் மியான் சிராருத்தீன் சாஹிப் அவர்களது வீட்டில் அமர்ந்திருப்பதை பார்த்தேன்.நான் அவர்கள் முன்னால் வந்தேன். ஹுஸூரிடம் நான் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினேன். ஹுஸூர், வ அலைக்கும் ஸலாம் என்று பதில் கூறினார்கள். பிறகு நம்மை வெட்கங்கெட்டவர் (துய்யூஸ்) என்று கூறிய அந்த நபர் எங்கே? என்று என்னிடம் கேட்டார்கள். நான் வெளியில் எட்டிப் பார்த்தபோது முஹம்மது அலி வந்து கொண்டிருந்தார். நான் ஹுஸூரிடம் அவ்வாறு கூறிய நபர் முஹம்மது அலி ஆவார். அவர் வெளியே வந்து கொண்டிருக்கிறார் என்று கூறினேன். ஹுஸூர் அவரை நாம் சந்திக்க மாட்டோம் என்று அவரிடம் கூறிவிடுங்கள் என்று என்னிடம் கூறினார்கள். இந்த கனவை நான் கண்ட பிறகு சில வாரங்கள் கழிந்தன. அல்லாஹ்வின் பழிவாங்குதல் எவ்வாறு இருந்தது என்று பாருங்கள்.

அந்த நபரது மகள் ஒரு கிளர்க் உடன் ஓடி போய்விட்டார். குஜரான் வாலாவிலிருந்த காவல் துறையின் அதிகாரிகள் அவர்களை பிடித்தனர். கிளர்க் இவள் எனது மனைவி என்று கூறினார். ஆனால் அந்த பெண் இவர் என்னிடம் வேலை செய்து வந்தார் என்று கூறினார். முரண்பட்ட தகவல்கள் கூறப்பட்டதால் காவல்துறைக்கு சந்தேகம் ஏற்பட்டது. குஜரான்வாலா Station –ல் வைத்து Police இவர்களை வண்டியிலிருந்து கிழே இறக்கியது. பிறகு அவர்கள் Deputy Commissioner முன்பு கொண்டு வரப்பட்டனர். அப்போது அந்த பெண் எனது தந்தையார்தான் வெட்கங்கெட்டவர் என்று வாக்குமூலம் கொடுத்தார். எனது தந்தையார் எனக்கு திருமணம் செய்து வைக்காமல் இருக்கின்றார் என்று கூறினார். இவ்வாறு ஹகிம் சாஹிபின் மகளே வாக்குமூலம் கொடுத்தார்.

நான் வேறு வழியில்லால் இந்த மனிதருடன் ஒரு நவாபின் மகனிடம் செல்கின்றேன் என்று அவள் தனது சம்வத்தை எடுத்து கூறினாள். Deputy Commissioner இதனால் உனது தந்தைக்கு இழிவு ஏற்படும். நீ அவரிடம் செல் என்று கூறினார். அதற்கு அவள் மறுப்பு தெரிவித்தவாறு எனது தந்தை என்னை கொன்று விடுவார் என்று கூறினார். Deputy Commissioner நாம் ஒரு ஏற்பாட்டை செய்வோம் என்று கூறினார். பிறகு அவர் பெண்ணை லாகூரின் Deputy Commissioner இடம் அனுப்பி வைத்து இந்த பெண்ணை அவரது தகப்பானாரிடம் ஒப்படைத்து விடுங்கள். ஆனால் அவளுக்கு எவ்வித துன்பமும் இழைக்கப்படாது என்ற உத்தரவாதத்தை பெற்று அவளை அனுப்பி வையுங்கள் என்று கூறினார். பிறகு Deputy Commissioner ஹகிம் சாஹிபை அழைத்து வரும்படி கூறினார். அவர் நீதிமன்றத்திற்கு வந்ததும் நீர் மிகப்பெரும் வெட்கங்கெட்டவர் என்று கூறி அவரை அதட்டினார். இரண்டாவது முறையாக Deputy Commissioner இடம் இதே சொல்லை

அவர் கேட்க வேண்டியது வந்தது. Deputy Commissioner அவரிடம் நீர் உமது மகளை பாதுகாக்காமல் இருக்கின்றீர். நீர் மிகுந்த வெட்கம் கெட்ட மனிதராக இருக்கின்றீர். இளம் வயதிலுள்ள பெண்ணுக்கு திருமணம் செய்து வைக்காமல் இருக்கின்றீர் என்று கூறினார்.

மேலும் 5,000 ரூபாய் ஜாமீன் தொகையாக செலுத்த வேண்டும். அப்போதுதான் உமது மகளை உன்னிடம் ஒப்படைப்பேன் என்றும் கூறினார். இவ்வாறு அவர் பழிவாங்கப்பட்டார். மேலும் படிப்பினை பெறத்தக்க வகையில் அவரது முடிவு எப்படி அமைந்தது என்றால் சிறிது காலம் கழிந்த பிறகு மவ்லவி சாஹிப் அந்த நகரத்தில் தய்யூஸ் என்று அனைவராலும் அறியப்பட்டார். ஒவ்வொருவரும் அவரை தய்யூஸ் என்று அழைக்க ஆரம்பித்தனர். சிறிது காலம் கழிந்த பிறகு அதே பெண் மீண்டும் ஓடி போய் விட்டாள். கிறித்துவராகி விட்டாள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மரணத்தை தொடர்ந்து சவுத்ரி குலாம் அஹ்மது சாஹிப் அவர்களை லாஹுரியாக ஆகிவிட்டார் என்று நான் கேள்விப்பட்டதும் நான் அவரிடம் சென்று லாஹுரிகளின் நிலைமை பற்றி அவருக்கு எடுத்துக் கூறினேன். அல்ஹம்துல்லில்லாஹ் இதன் மூலம் அவருக்கு மிக நல்ல தாக்கம் ஏற்பட்டு லாஹுரி சிந்தனைகளிலிருந்தும் அவர் தவ்ஃபா செய்தார். பிறகு காதியானுக்கு அவர் வந்தார். இவ்வாறே துணை நீதிபதியான சவுத்ரி நிஃமத் கான் சாஹிபிற்கு கேடி என்ற இடத்தில் வைத்து தப்லீக் செய்தேன். இதற்கு பிறகு சிறிது காலம் கழிந்ததும் அவர் அஹ்மதியாகி விட்டார். அவர் ஒனேவில் இருந்த சமயம் அவருக்கு லாஹுரி சிந்தனைகள் உள்ளன என்று கேள்விப்பட்டேன். நான் அவரிடம் கடித தொடர்பு வைத்தேன். பிறகு தாமாகவே அவரது சிந்தனையை அவர் மாற்றி கொண்டார். அல்லாஹ்வின் அருளால் இப்போது இந்த லாஹுரிகளின் எண்ணிக்கை மிக குறைவானதாக ஆகிவிட்டது. எங்கெல்லாம் அவர்கள் இருந்தனரோ அங்கெல்லாம் அல்லாஹ்வின் அருளால் கடந்த 2 வருடங்களாக பெரும் எண்ணிக்கையில் அவர்கள் அஹ்மதிகளாக ஆகிவிட்டார்கள்.

**ஹஸ்ரத் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஒரு முறை நான் ஹஸ்ரத் சாஹிபை சந்திப்பதற்காக அவர்களது சமூகத்தில் வந்தேன். அப்போது அவர்கள் ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு சஹாபி ஹஸ்ரத் சாஹிபிற்கு அருகில் நின்று கொண்டிருந்தார்கள். அவர் என்னை பார்த்து இவர் சீசரை சார்ந்த மவுலவி அப்துல்லாஹ் ஆவார். இவருடன் பல விவாதங்கள் நடந்துள்ளன. ஆனால், ஒவ்வொரு காலத்திலும் அல்லாஹ் இருக்கு வெற்றியை வழங்கி வந்தான் என்று கூறினார். இதை கேட்ட ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் ஆம். உண்மைக்கு எப்போதும் வெற்றி கிடைத்தே வந்துள்ளது என்று கூறினார்கள்.

இந்த அருளுக்குரிய நபரின் நாவிலிருந்து இந்த சொற்கள் வெளிவந்ததை கேட்டு எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. எந்த நபரது நாவிலிருந்து இந்த சொற்கள் வெளிவந்துள்ளதோ அதன் மூலம் நான் எப்போதும் உண்மையில் நிலைத்திருப்பேன். எப்போதும் அல்லாஹ் எனக்கு வெற்றியை வழங்குவான் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டது. அந்த இறைவன் எந்த ஒரு விவாதத்திலும் எனக்கு தோல்வி ஏற்பட விட்டதில்லை. எப்போதும் எனக்கு வெற்றியையே வழங்கியுள்ளான்.

**ஹஸ்ரத் சவுத்ரி முஹம்மது அலி சாஹிப் அறிவிக்கின்றார்கள்.**

எனது தந்தையார் சியால்கோட்டில் நடந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றார்கள். அவர் திரும்பி வந்ததும் அவர் தப்லீக் செய்ய ஆரம்பித்தார். அவர் அங்கு பைஅத் செய்துவிட்டுதான் திரும்பி வந்திருந்தார். அவரது தப்லீக் மூலம் கட்டியாலியான் என்ற ஊரை சார்ந்தவர்கள் மளமளவென்று பைஅத் செய்ய ஆரம்பித்தனர்.

குலாம் ரகுல் பஸரா சாஹிபிடமிருந்து நான் கேள்விப்பட்டேன். பெருமளவில் கட்டியாலியானவை சார்ந்தவர்கள் பைஅத் செய்கின்றார்கள் என்பதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பார்த்த போது கட்டியாலியான் கிராமமா அல்லது நகரமா? என்று கேட்டார்கள்.

சவுத்ரி முஹம்மது அலி சாஹிபின் சகோதரர் ஹாகிம் அலி இந்த அறிவிப்பை உறுதி செய்துள்ளார். பிறகு ஷேக் அப்துர்ரஸீத் சாஹிபின் அறிவிப்பு இதுவாகும்.

அஹ்மதியல்லாத மவுலவி முஹம்மது அலி சாஹிப் போப்டி இங்கு வந்து போவதுண்டு. நல்ல குரல் வளம் படைத்தவராக அவர் இருந்தார். அவரது சொற்பொழிவை கேட்பதற்கு எண்ணற்ற பெண்கள் சென்றார்கள். சிறந்த முறையில் அவர் சொற்பொழிவு நிகழ்த்துவார். மக்களை அதன் மூலம் ஈர்த்து வந்தார். திலாவத்தும் சிறந்த முறையில் இருக்கும். இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரை அவர் இங்கு தங்கி வந்தார். அவர் இங்கு வந்து ஹஸ்ரத் சாஹிபை அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை எதிர்க்க ஆரம்பித்தார். தீய சொற்களை பேசி வந்தார். அவருடனும் விவாதங்கள் நடந்தன. பெற்றோர்கள் என்னை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டனர். எனது தாயார் என்னுடன் அதிகமாக கடுமையுடன் நடந்து கொண்டார்கள். ஏனென்றால், இந்த போப்டி மவுலவியின் தாக்கம் பெருமளவில் இருந்து வந்தது. பெற்றோர்கள் உம்முடன் உள்ள உறவை முறித்துக் கொள்கிறோம் என்று கூறிவிட்டனர். பல மாதங்கள் வரை வீட்டிலிருந்து வெளியில் சென்று இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனது தந்தையார் எனது தாயாரிடம் முதலில் இவன் மார்க்கத்தை பற்றி கவலையில்லாமல் இருந்து வந்தான். தூங்கி கொண்டே இருந்தான். இப்போது தொழுகின்றான். தஹஜ்ஜுதும் தொழுகின்றான் எதற்காக இவனுடன் உள்ள உறவை நான் முறித்துக் கொள்ள வேண்டும்? என்று கூறிவந்தார்கள். ஒரு புறம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை இவர்கள் எதிர்த்து வந்தனர். உறவை முறித்து கொள்வோம் என்று மிரட்டினர். ஆனால், இவர் அஹ்மதியானதிலிருந்து இவரது நிலையே மாறிவிட்டது என்ற தாக்கமும் இருந்து வந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவ்வாறிருந்தும் உலக விஷயங்களை கருத்தில் கொண்டவாறு அவர்கள் என்னிடம் மிர்ஸாயியத்தை விட்டுவிடு என்று கூறுவார்கள். நான் அவர்களிடம் இது பற்றி எனக்கு புரிய வையுங்கள் என்றே கூறி வந்தேன். இந்த தருணத்தில் பல முறை எனக்கு மவுலவி முஹம்மது ஹுஸைன் சாஹிபுடன் கருத்து பறிமாற்றம் நடந்தது. மவுலவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் எங்களிடம் கடன் வாங்கியிருந்தார். தந்தையார் கடன் தொகையை கேட்பதற்காக என்னை அவரிடம் அனுப்பி வந்தார்கள்.தற்செயலாக மவுலவி சாஹிப் ஒரு பிரசுரத்தை வெளியிட்டிருந்தார். அதில் இரத்த வெறியுள்ள மஹ்தி தோன்றுவதை அவர் மறுத்து கூறியிருந்தார். அது தொடர்பாக உள்ள ஹதீஸ் சுயமாக இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களாகும். அவை ஆதாரபூர்வமானவை அல்ல என்று அவர் எழுதியிருந்தார். அவரது இந்த பிரசுரம் ஹஸ்ரத் சாஹிபையும் சென்றடைந்தது. ஹஸ்ரத் சாஹிப் இந்த பிரசுரத்தை பார்த்த பிறகு இது தொடர்பான மார்க்க தீர்ப்பு என்ன? என்று கேட்டு ஏடு கேள்வியை தயார் செய்தார்கள். கோடுகாமை சார்ந்த டாக்டர் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்களை மவுலவிகளிடம் அனுப்பி வைத்தார்கள். ஃபத்வா வாங்குவதற்காக அனுப்பி வைத்தார்கள். ஆலீம்களிடம் ஃபத்வா வாங்குவதற்காக அவர் சென்றார். சில ஆலிம்கள் ஃபத்வா கொடுத்தனர். சிலர் மறுத்து விட்டனர்.மவுலவி முஹம்மது ஹுஸைன் சாஹிபின் இந்த பிரசுரம் கிடைத்ததும். அது தொடர்பாக மற்றவர்கள் என்ன தீர்ப்பு கூறுகின்றார்கள் என்பதை கேட்டறிய மற்றவர்களிடம் ஒருவரை அனுப்பி வைத்தார்கள். சிலர் அந்த பிரசுரத்திற்கு எதிரான ஃபத்வாவை கூறினர். சிலர் ஒன்றும் கூறாமல் தப்பித்து கொண்டனர். டாக்டர் சாஹிப் கூறுகின்றார்கள். இவர்தான் மவுலவிமார்களிடம் ஃபத்வா பெறுவதற்காக சென்றார்.

டாக்டர் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் கூறுகின்றார்கள். நான் மவ்லவிமார்களிடம் சில நேரம் திராட்சை அல்லது இது போன்ற மற்ற பழங்களை கொடுத்து வந்தேன். அவர்கள் எனது விருப்பத்திற்கு ஏற்ப ஃபத்வா கொடுத்து வந்தார்கள்.

மவ்லவிகளிடம் சென்று பழங்கள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கி நாம் விரும்புவது போன்ற ஃபத்வாவை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று கூறினார்.

இன்றும் இதே நிலைதான் இருக்கின்றது. ஆனால், இன்றைய நாட்களில் இந்த ஃபத்வாக்களுக்கான விலை மிகவும் கூடிவிட்டது.

முதலில் ஃபத்வா கொடுக்க இவர்கள் மறுத்தனர். பிறகு கொஞ்சம் ஏதாவது பெற்று கொண்டு ஃபத்வா வழங்கி வந்தனர்.

தலைப்பாகையின் துணியை முகத்திற்கு முன்னால் வைத்தவாறு ஹஸ்ரத் சாஹிப் நான் கூறிய இவ்விஷயங்களை கேட்டு புண்சிரிப்பு சிரித்தார்கள்.

கூறுகின்றார்கள்: மவுலவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்களின் ஃபத்வா வெளிவந்திருந்த அந்த மாத இதழை பற்றி எனக்கு தெரியும். ஒரு முறை அவருடன் கருத்து பறிமாற்றம் செய்ததாவது, இரத்த வெறியுள்ள மஹ்தி தோன்றமாட்டார் என்பது தான் உங்களது கொள்கையாக இருக்கின்றது. இது தொடர்பாக ஹதீஸ்கள் பலகீனமானவை யூகங்கள் நிறைந்தவை என்று நீங்கள் எழுதியுள்ளீர்கள். பிறகு மஹ்தி வருவார் என்றும் நீங்கள் கூறுகின்றீர்கள். இருவிதமான கருத்துக்களை நீங்கள் ஏன் கூறுகின்றீர்கள் என்று நான் அவரிடம் கேட்டேன். உங்களது அசல் கொள்கை என்ன? என்பதை பற்றி ஏன் கூறாமல் இருக்கீன்றீர்கள் என்று நான் கேட்டேன். எனது இந்த கேள்விக்கு அவர் எந்த பதிலையும் கூறாமல் இருந்தார். செல்! மிர்ஸாயி ஆக ஆகிவிடு. உமக்கு இதில் என்ன இருக்கின்றது என்று அவர் பதில் கூறினார்.

**ஹஸ்ரத் ஷேக் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அஸர் தொழுகைக்கு பிறகு மஸ்ஜிது முபாரக்கில் அமர்ந்திருந்தார்கள். அப்போது ஒரு நபர் ஹுஸூர் எங்கள் கிராமத்திற்கு ஒரு மவுலவி சாஹிப் வந்தார். அவரை அஹ்மதி அல்லாதவர்கள் ஒரு உயர்வான இடத்தில் நிற்க வைத்து சொற்பொழிவாற்ற வைத்தனர். நாங்களும் அங்கு சென்றிருந்தோம் அந்த மவுலவி லா நபிய்ய பஃதி என்ற ஹதீஸை படித்து மக்களை உணர்வுப்பூர்வமாக தூண்டிவிட்டார். அவர் மீண்டும் மீண்டும் மக்களே! பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு பிறகு எந்த நபியும் வரமாட்டார் என்று கூறுகின்றார்கள். ஆனால், காதியானைச் சார்ந்த மிர்ஸா சாஹிப் நான் நபி என்றும் நான் ரஸூல் என்றும் கூறுகின்றார். பிறகு பஞ்சாபியில் மிர்ஸா ஸாஹிபை நாம் எப்படி நபி என்றும் ஏற்றுக் கொள்ள முடியும்? என்று கேட்டார். இவர்கள் கூறுகின்றார்கள்.

நான் எழுந்து நின்று மவுலவி சாஹிப் மஸ்ஜிது நப்வி தொடர்பாக இந்த மஸ்ஜிதிற்கு பிறகு வேறு எந்த மஸ்ஜிதும் இருக்காது என்று ஹஸ்ரத் நபிகள நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்கு நீங்கள் என்ன பொருள் கொடுப்பீர்கள்? என்று கேட்டேன்.

இந்த மஸ்ஜிது தொடர்பான ஹதீஸிற்கு நீங்கள் என்ன பொருள் கொடுப்பீர்களோ அதே பொருளைதான் நாங்கள் லா நபிய்ய பஅதி என்ற ஹதீஸிற்கு கொடுப்போம். பிறகு உங்களுக்கு இதையும் கூறிக் கொள்கிறோம்.

எந்த நபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்தை ரத்து செய்து விடுவாரோ அவர் நபியாக முடியாது. ஏனென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஷரீஅத் தான் இறுதி ஷரீஅத் ஆகும். இதற்கு பிறகு எந்த புதிய ஷரீஅத்தையும் கொண்டு வருகின்ற நபி வரமுடியாது என்று நான் கூறினேன்.

மவ்லவி சாஹிப் எனது இந்த பதிலால் கோபமடைந்து என்னை ஏச தொடங்கினார். பதில் கூற முடியவில்லையென்றால் இதுதான் நடக்கும் மவ்லவி சாஹிப் உங்களது ஏச்சுப் பேச்சுக்களுக்கு நாங்கள் பதில் கூற முடியாது என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த நபர் கூறிய இந்த விஷயத்தை கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். புன்சிரிப்பு சிரித்தார்கள்.

இன்றைய நாட்களிலும் இந்தப் பிரச்சனை தான் எழுப்பப்படுகிறது. இந்த விஷயத்தின் மூலமே மக்களது மூளைகளில் இவர்கள் விஷத்தன்மையை உருவாக்குகின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வர முடியாது. இவர்கள் மிர்ஸா சாஹிபை நபி என்று ஏற்றுக் கொள்கின்றனர் என்று கூறி பாகிஸ்தானில் இந்தப் பிரச்சனை மூலமாக மக்களை அஹ்மதிய்யத்திற்கு எதிராகத் தூண்டி விட்டு அவர்களும் நம்மை எதிர்த்து வருகின்றனர்.

மதிப்பிற்குரிய மியான் ஸராபத் அஹ்மது சாஹிப் தனது தந்தையாரான மர்ஹூம் மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிப் அவர்களின் நிலைமைகள் பற்றி விளக்கியவாறு எழுதுகின்றார்கள்:

தந்தையாருக்கு மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதற்கான பேரார்வம் இருந்து வந்தது. முதிய வயதிலும் கூட அவர் இளைஞர்களை தோற்கடித்தவாறு முன்னேறி வந்தார். 1934ல் ஒரு ஜுமுஆ குத்பாவில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அன்னாரது வஃபாத்தை ஷஹாதத் என்று குறிப்பிட்டதுடன் மட்டுமின்றி மவ்லவி சாஹிப் இளைஞர்களை விட துரிதமாக பணிகளைச் செய்து வந்தார்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் கூறினார்கள்: தப்லீகில் பைத்தியக்காரர்களைப் போன்று பணிபுரிகின்ற மூன்று நபர்களை நான் பார்த்துள்ளேன். முதல் நபர் மர்ஹூம் ஹாஃபிஸ் ரோஷன் அலி சாஹிப் ஆவார்கள். இரண்டாம் நபர் இந்த மவ்லவி சாஹிப் ஆவார்கள். மூன்றாவது நபர் மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் ராஜிகி ஆவார். இந்த மூவரும் இரவு பகல் என்று பார்க்காமல் தப்லீகிலேயே ஈடுபட்டிருந்தனர். மியான் ஸராபாத் அஹ்மது சாஹிப் அவர்களே தங்களது தந்தையாரான மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிபின் நிலைமைகளை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்.

தந்தையார் இந்த இயக்கத்தின் தப்லீக் தொடர்பாக தான் கண்ட கனவு ஒன்றைக் கூறி வந்தார்கள். அதை நான் எழுதுகின்றேன். எனது தந்தையார் கூறுகின்றார்கள்:

நான் ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை கனவில் பார்த்தேன். அவர்கள் எனது வீட்டிற்கோ அல்லது எங்களது கிராமத்திற்கோ வந்துள்ளார்கள். எங்கு வந்திருந்தார்கள் என்பது சரியாக எனது நினைவில் இல்லை. அவர்கள் என்னிடம் பேனாவைக் கேட்டார்கள். அதற்குப் பிறகு எனது கண்கள் திறந்து விட்டன. சிறிது காலம் கழிந்ததும் நான் காதியானில் அவர்களது சபைக்கு வந்தேன். தூய வெள்ளை நிறத்திலான இரண்டு போர்வைகளை வாங்கி வைத்திருந்தேன். வெவ்வேறு நிறத்திலான இரண்டு (பேனா வைப்பதற்கான) Holders ம் வாங்கி இருந்தேன். அவற்றை ஹுஸூர் அவர்களுக்கு வழங்கினேன்.

ஹுஸூர் அவர்களிடம் பேனாவைக் கேட்டு வாங்கிய அந்த கனவிற்கான விளக்கத்தை அன்னாரிடம் நான் கேட்டேன்.

ஹுஸூர் அவர்கள் அன்புடன் எனது அற்பமான காணிக்கையை ஏற்றுக் கொண்டவாறு என்னிடம் நீங்கள் உங்களது கனவை நிறைவேற்றி விட்டீர்கள். நீங்கள் மார்க்கத் தொண்டு செய்வதுதான் பேனாவை என்னிடமிருந்து கேட்டுப் பெற்றதன் விளக்கமாகும். நீங்கள் சொற்பொழிவு மூலமும், எழுத்து மூலமாகவும் மார்க்கத்திற்கு தொண்டாற்றுங்கள் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு நான் முழுமையான வேகத்துடன் தப்லீக் செய்ய ஆரம்பித்தேன் என்று எனது தந்தையார் கூறினார்கள். இறைவனது அருளால் அவர்களது முயற்சிகளுக்கு நல்ல விளைவு ஏற்பட்டது. அவர்களது இரு சகோதரர்களும் பைஅத்தில் இணைந்து விட்டனர். அவர்களில் ஒருவர் தமது பகுதியில் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆலிமாகத் திகழ்ந்தார். அவர்தான் பெரோஸ்பூர் ஜில்லாவைச் சேர்ந்த மவ்லவி முஹம்மதலி சாஹிப் ஆவார்கள். எதிரிகளுக்கு இதுபற்றி தெரிந்ததும் அதாவது மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிபும் அவர்களும் மவ்லவி அலி முஹம்மது சாஹிபும் அஹ்மதிகளாகி விட்டனர் என்பது அவர்களுக்கு தெரிய வந்ததும் அவர்களது இடுப்புகள் முறிந்து விட்டன. முஹம்மது அலி போடிபாவும் மஹ்மூது ஷா அவர்களும் இவர்கள் அஹ்மதிகளாகி விட்டதை அறிந்து வஸிராவிலிருந்து அழுதவாறு இந்த இருவரும் சென்றனர். தங்களது நெருக்கமான உறவினர் இறந்து விட்டது போன்று இவ்விருவரும் ஒருவரது கழுத்தின் மீது மற்றவர் கைபோட்டவாறு பெரோஸ்பூர் வரை அழுது கொண்டே சென்றனர். பெரோஸ்பூர் மாவட்டத்திலுள்ள ஸீரா, லுடேக், ராக்னவாலா, நானியால் போன்ற இடங்களில் கலப்பற்ற தூய உள்ளம் கொண்டவர்களின் ஜமாஅத்துகள் உருவாகியது. அல்ஹம்துலில்லாஹ்.

**மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிப் தொடர்பாக மியான் ஸராபத் அஹ்மது சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

மவ்லவி சாஹிப் 1924 ஆம் ஆண்டு மல்கானாவில் தப்லீகிற்காக சென்றார்கள். அங்குள்ள மக்களுக்கு இஸ்லாத்தை தப்லீக் செய்ததுடன் மட்டுமின்றி அந்தப் பகுதியிலுள்ள கண்ணியமிக்க நபர்களுடன் தனது தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். தனது பழைய கிழிந்த ஆடைகளுடன் அப்போதைய ஆட்சியாளர்களை அவர்கள் சந்தித்து வந்தார்கள். 70 அல்லது 80 வயதை அடைந்த முதியவர் தனது பொதி ஒன்றை சுமந்து கொண்டு செல்வதைப் பார்த்து இந்த முதியவருக்கு மக்கள் முஸ்லிம்களாக வேண்டும். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அவரது உயிர் மூச்சாக இருப்பதைப் பெற்றனர். மவ்லவி சாஹிப் அவர்களிடம் பெருமளவில் சந்தா வசூல் செய்வார்கள். இந்த ஜமாஅத் பணி செய்யும் ஜமாஅத் என்ற எண்ணத்துடன் அவர்கள் மகிழ்ச்சியாக இந்த தொகையை வழங்கினர். பிறகு அவர்களது முயற்சியால் பலரும் இந்த உண்மையான இயக்கத்தில் இணைந்தனர்.

**ஹாஃபிஸ் குலாம் ரஸூல் வஸிராபாதி சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மியான் பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் வீட்டில் அமர்ந்தவாறு பல சகோதரர்களையும் அங்கு ஒன்றுதிரட்டியவாறு அந்த வீட்டின் கதவருகில் அமர்ந்தவாறு கூறினார்கள்.

இங்கிருந்து அறிவைப் பெற்று வெளியில் சென்று மக்கள் தப்லீக் செய்ய வேண்டும் என்பதற்காகவே நான் உயர்நிலைப்பள்ளியை நிறுவினேன். ஆனால் வேதனை நிறைந்த விஷயம் என்னவென்றால், மக்கள் அறிவைப் பெற்றுக் கொண்ட பிறகு தங்களது வியாபாரங்களில் ஈடுபடுகின்றனர். அதனால் எனது நோக்கம் நிறைவேறாமல் போய் விடுகிறது. உங்களில் எவராவது தனது மகனை இறைவனுக்காக அவன் மார்க்க அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டும் அவனை என்னிடம் ஒப்படைக்க தயாராக இருக்கின்றாரா? என்று கேட்டார்கள்.

அப்போது எனது மகனான மர்ஹூம் மவ்லவி உபைதுல்லாஹ் அவர்கள் தமது சிறிய வயதில் என்னருகில் இருந்தார். நான் எனது மகனை ஹஸ்ரத் சாஹிபிடம் ஒப்படைத்தேன். ஹுஸூர் தனது அருளுக்குரிய கைகளால் அச்சிறுவனைப் பிடித்தவாறு அந்த சமயத்தில் மத்ரஸா அஹ்மதிய்யாவில் உதவிப் பணியாளராக இருந்து வந்த மியான் ஃபஸ்லுல் தீன் சாஹிப் சியால்கோட்டி அவர்களிடம் அச்சிறுவனை ஒப்படைத்து நீங்கள் முப்தி முஹம்மது ஸாதிக் சாஹிபிடம் இவனை ஒப்படைத்து விட்டு வாருங்கள் என்று கூறினார்கள். முப்தி சாஹிப் இந்த நாட்களில் மத்ரஸா அஹ்மதிய்யாவின் தலைமை ஆசிரியராக இருந்தார். அந்த சிறுவர் மத்ரஸா அஹ்மதிய்யாவில் சேர்ந்து ஆலிம் பாஸிலானார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது கிலாஃபத் காலக்கட்டத்தில் அவரை மரூட்டஸிற்கு முபல்லிக் ஆக அனுப்பி வைத்தார்கள். ஆறே முக்கால் வருடம் வரை அவர் அங்கு தப்லீக் பணி செய்து வந்தார். இறுதியில் தனது நுட்பமான ஞானத்திற்கேற்ப அல்லாஹ் அவரை மரணிக்கச் செய்தான். அவருக்கு பிறகு அவரது மனைவியும் சிறிய வயதிலிருந்த அவரது ஒரு மகனும், ஒரு மகளும் இருந்தனர். இவர்களை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் கட்டளைக்கேற்ப நான் 1924ல் மரூட்டஸ் சென்று அவர்களை திரும்ப அழைத்து வந்தேன். அதற்குப் பிறகு அவரது மனைவியான பாத்திமா பீவி வஃபாத் ஆகிவிட்டார். இவர் எனது தம்பியான ஹாபிஸ் குலாம் முஹம்மது சாஹிபின் மகளாவார்கள். இவரும் சொற்செறிவுடன் பேசுகின்ற சிறந்த பெண் முபல்லிக் ஆக இருந்தார். அல்லாஹ் அவரை மன்னிப்பானாக! அவர் மீது கருணை காட்டுவானாக!

தொடர்ந்து அறிவிப்பவர் கூறுகின்றார்: இப்போது இந்த இரண்டு குழந்தைகளும் எனது தர்பிய்யத்தின் கீழ் இருந்து வருகின்றனர். மகளுக்கு திருமணம் ஆகி விட்டது. மகன் பெயர் பஷீருத்தீன் ஆகும். அவன் என்னிடம் இருந்து வருகின்றான். அவரும் மத்ரஸா அஹ்மதிய்யாவில் படிக்கின்றார். அவனும் படிப்பை முடித்து அவனது தந்தையாரைப் போன்று மவ்லவி உபைதுல்லாஹ் ஷஹீது மர்ஹூமின் இடத்திற்குச் சென்று பணிபுரிய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

அல்லாஹ்வின் அருளால் இந்த மகனுக்கும் இதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரையும் மொரீஷியஸிற்கு அனுப்பி வைத்தார்கள். இவரும் மிக நீண்ட காலம் அங்கு இருந்தார். இவரது பிள்ளைகள் இப்போது இங்குதான் வசித்து வருகின்றனர். அவர்களில் எவரும் முபல்லிக் ஆகவில்லை. எவ்வாறிருப்பினும், இவர்களும் மொரீஷியஸில் தப்லீக் செய்தனர். ஒரு நீண்ட காலம் ஜமாஅத்திற்கு தொண்டு செய்துள்ளார்கள்.

பிறகு மியான் ஸராபத் அஹ்மது சாஹிப் தனது தந்தையாரான மர்ஹூம் மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிபின் நிலைமைகளை இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஜுமுஆ நாளில் அவர்கள் கன்னுக்கா நங்கில் என்ற இடத்திற்கு சென்றார்கள். ஜுமுஆ தொழ வைப்பதற்காக சென்றார்கள். வழியில் பசி எடுத்ததால் இரண்டு பைசாவுக்கு கடலை வாங்கி சாப்பிட்டார். தமது ஆடைகளை துவைத்து விட்டு கடலையை சாப்பிட்டு விட்டு அவர்கள் பயணத்திற்கு தயாரானார்கள. வழியில் அனல் காற்று வீசியது. வெப்பத்தின் நாட்களாக அவை இருந்தன. மயக்கமடைந்து அவர் தரையில் படுத்து விட்டார். வழியில் சென்று கொண்டிருந்த ஒரு நபர் குரூர் காவல் நிலையத்தில் சென்று காதியானி மவ்லவி சாஹிப் அனல் காற்று வெப்பம் தாங்க முடியாமல் மயக்கமடைந்து வழியில் விழுந்து கிடக்கின்றார் என்று கூறினார். அவர்களை நன்கு அறிந்திருந்த ஒரு சிப்பாய் ஓடி வந்தார். வழியில் எந்த குதிரை வண்டியும் அவருக்கு கிடைக்கவில்லை. அவரை கைத்தாங்கலாக பிடித்து மெதுவாக ஊருக்கு அழைத்து வந்தார். அப்போதும் முன்பை விட அதிகமாக அனல்காற்று வீசிக் கொண்டிருந்தது. அவர்களிடம் எந்த சக்தியும் இல்லாமல் ஆனதால் ஊருக்கு வெளியே இருந்த ஒரு விடுதியின் வராண்டாவில் அவர்கள் படுத்து விட்டார்கள். மக்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு வாருங்கள் என்று அவரை அழைத்தனர். நான் செல்ல வேண்டிய இடத்தை அடைந்து விட்டேன் என்று அவர் கூறினார். மக்கள் அவருக்கு மருந்துகளைக் கொடுத்தனர். ஆனால் எந்தத் தாக்கமும் ஏற்படவில்லை. உங்களது மகனுக்கு தந்தி கொடுக்கலாம் என்று மக்கள் வலியுறுத்திக் கூறினர். அதற்கு அவர்கள் அவன் சிறுவன் பயந்து விடுவான். இறைவனிடம் அவனை ஒப்படைக்கின்றேன் என்று கூறினார். இந்த சொற்களைக் கூறிய பிறகு அந்த தூய ஆண் மகன் மார்க்க தொண்டாற்ற வேண்டும் என்றே தனது எஜமானரின் கட்டளையை முழுமையான கீழ்படிதலுடன் நிறைவேற்றியவாறு முழுமையாக கட்டுப்பட்டு செயலாற்றியவாறு தன்னைப் படைத்த அந்த உண்மையான இறைவனிடம் சென்று சேர்ந்து விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

கூறுகின்றார்கள்: மர்ஹூமின் ஜனாஸா தொழுகையை அஹ்மதி அல்லாதவர்கள் தொழ வைத்தனர். அவர்களே அவரை நல்லடக்கம் செய்தனர். அல்லாஹ் அவர்களுக்கு இதற்கான சிறந்த நற்கூலியை வழங்குவானாக! மூன்றாவது நாள்தான் இவர்களது வஃபாத் பற்றிய செய்தி அஹ்மதி சகோதரர்களுக்கு தெரிய வந்தது. அவர்கள் இந்த எளியவனுக்கும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கும் இதுபற்றி தகவல் தெரிவித்தார்கள். ஹுஸுர் ஜுமுஆவில் இது பற்றி கூறினார்கள். ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள். மர்ஹூம் அவர்கள் வஸிய்யத் செய்திருந்தார். எனவே அவருக்கான நினைவுக்கல் பெஹஸ்தி மக்பராவில் வைக்கப்பட்டது. அல்லாஹ் இந்த எல்லா பெரியவர்களது தகுதிகளையும் உயர்த்திக் கொண்டே செல்வானாக! அவர்களது இந்த ஆன்மாவை எப்போதும் நம்மிடத்திலும் நமது எதிர்கால சந்ததிகளிடமும் நீடிக்கச் செய்வானாக!

இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களைப் படிக்கின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

புதிய அறிவைப் பெற வேண்டும் என்ற போதனைக்கு எதிராக இருக்கின்ற மவ்லவிகள் தவறிழைத்துள்ளனர். உண்மையில் தங்களது தவறுகளையும் பலவீனங்களையும் மறைப்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்கின்றனர். புதிய அஹ்மதிகள் மூலம் நடக்கின்ற ஆராய்ச்சிகளை இஸ்லாத்தின் மீது தப்பெண்ணம் கொள்ள வைத்து மக்களை வழிகெடுத்து விடும் என்ற கருத்து அவர்களது மூளையில் பதிந்து விட்டது. அறிவும், விஞ்ஞானமும் இஸ்லாத்திற்கு முற்றிலும் முரண்படுகின்ற விஷயங்கள் என்று அவர்கள் எண்ணிக் கொண்டுள்ளனர். தத்துவங்களிலுள்ள பலவீனங்களை வெளிப்படுத்தும் ஆற்றல் அவர்களுக்கு

இல்லை. இவர்கள் தமது இந்த பலவீனங்களை மறைப்பதற்காக புதிய அறிவு நிறைந்த கல்வியை கற்பதே ஆகுமானதல்ல என்று இவர்களே இட்டுக்கட்டி கூறி வருகின்றனர். அவர்களின் ஆன்மா தத்துவங்களுக்கு முன்னால் நடுங்குகிறது. புதிய ஆராய்ச்சிகளுக்கு முன்னால் அவை ஸஜ்தா செய்கின்றன.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனது இல்ஹாம் மூலம் உருவாகின்ற அந்த உண்மையான தத்துவ ஞானம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அந்த தத்துவங்களே திருக்குர்ஆனில் நிரம்பி காணப்படுகிறது. மிகவும் தாழ்மையுடன் தன்னை ஒன்றுமற்றவன் என்று கருதி இறைவனது சன்னிதானத்தின் முன்னால் விழுபவர்களுக்கு அவை கிடைக்கும். அவர்களது மூளைகளிலிருந்து கர்வம் நிறைந்த எண்ணங்களின் துர்நாற்றம் வெளியேறி விடுகிறது. அவர்கள் தங்களது பலவீனங்களை ஏற்றுக் கொண்டவாறு மன்றாடியவாறு அவர்கள் இறைவனின் உண்மையான அடிமைகளாக இருக்கின்றனர் என்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காகவும் அல்லாஹ்வின் கலிமாவை உயர்த்துவதற்காகவும் புதிய அறிவுகளைப் பெற வேண்டிய தேவை இன்று இருக்கின்றது. அதை முயற்சி செய்து பெற வேண்டும். ஆனால் எனக்கு இந்த அனுபவமும் இருக்கின்றது. அதனை எச்சரிக்கையாக நான் எடுத்துக் கூற விரும்புகின்றேன். யார் இந்த அறிவைப் பெற்ற பிறகு ஒரு பக்கம் மட்டும் முழுமையாக சாய்ந்து விட்டார்களோ அதாவது உலக கல்வியைக் கற்று விட்டு மார்க்கத்தை கற்காமல் விட்டு விட்டார்களோ மேலும் அதில் எந்த அளவு அவர்கள் மூழ்கி விட்டனர் என்றால் நல்லுள்ளம் படைத்த இறைத் தொடர்புள்ள மக்களின் அருகில் அமர்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. அவர்கள் இறை ஒளியைப் பெறாமல் இருந்ததால் பொதுவாக அவர்கள் தடுமாறி விடுகின்றனர். அவர்கள் இஸ்லாத்தை விட்டும் விலகி மிகத் தொலைவில் சென்று விட்டார்கள். அந்த அறிவுகளை இஸ்லாத்தின் கீழ் கொண்டு வருவதற்குப் பதிலாக இஸ்லாத்தை அந்த அறிவுகளுக்கு கீழ் கொண்டு வருகின்ற பயனற்ற முயற்சியை அவர்கள் செய்கின்றார்கள். இவ்வாறு அவை தங்களது எண்ணங்களில் மார்க்க, சமுதாய தொண்டாற்றக்கூடிய பாதுகாவலர்களாக தங்களைக் கருதிக் கொண்டனர்.

நினைவில் கொள்ளுங்கள். வானத்து ஒளியை தன்னகத்தே கொண்டவர் தான் மார்க்கத்திற்கு தொண்டாற்ற முடியும். எனவே இந்த வானத்து ஒளியைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்த விஷயங்களைக் கூறக் காரணம் என்னுடன் தொடர்பு வைத்துள்ள நீங்கள் இந்தத் தொடர்பின் காரணமாக எனது உடலின் உறுப்புகளாக ஆகி விட்டீர்கள். இவ்வாறான சொல்லை நமக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவது நமக்கு மிகப்பெரிய கண்ணியத்தை வழங்கக் கூடியதாக இருக்கின்றது. மனிதனுடைய உடல் உறுப்புகள் தாமாக எந்த பணியையும் செய்ய முடியாது. மூளை இடுகின்ற கட்டளைக்கேற்ப அது செயல்படுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த எதிர்பார்ப்பை முழுமையாக நிறைவேற்ற முயற்சி செய்கின்ற மாபெரும் பொறுப்பு அஹ்மதிகளுக்கு இருக்கின்றது. நமது அந்த பணிகள் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆன் போதிக்கின்ற உண்மையான போதனைகளுக்கேற்ப இருக்க வேண்டும். இது பற்றியே இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் போதனை செய்துள்ளார்கள். இது இல்லாமல் நாம் நமது பைஅத்திற்குரிய உரிமையைச் செலுத்த முடியாது.

கூறுகின்றார்கள்: நீங்கள் எனது உடல் உறுப்புகளாக ஆகி விட்டீர்கள். எனவே, இந்த விஷயங்களை செயல்படுத்த வேண்டும். அறிவிலிருந்தும், இறைவனது வசனங்களிலிருந்தும் பலன்பெற்றவாறு உங்களது பணிகளைச் செய்து வாருங்கள். அப்போதுதான் உண்மையான இறைஞானம் மற்றும் நிச்சய உறுதியின் ஒளி உங்களிடம் உருவாகும். நீங்கள் மற்ற மக்களை இருளிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வருகின்ற ஊடகமாக ஆகி விடுங்கள். ஏனென்றால், இன்றைய நாட்களில் ஆட்சேபனைகளின் அடித்தளம், இயற்கை மருத்துவம் மற்றும் வானவியல் ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சனைகள் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த அறிவுகளின் உண்மைகளையும் அதன் நிலைகளையும் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வது

அவசியமானதாகும். அதன் மூலம் இந்த ஆட்சேபனைகளுக்கு பதில் கூறுவதற்கு முன்பு அவற்றின் உண்மை நிலை நமக்கு தெளிவாக தெரிந்திருக்க வேண்டும்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் நான் கூறும் இந்த விஷயத்தைக் கேளுங்கள். அதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். மனிதனின் பேச்சு உண்மையான உள்ளத்துடன் இல்லாமல் இருந்தால், மேலும் அதில் செயல் அளவிலான ஆற்றல் இல்லாமல் இருந்தால் அது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அதாவது எந்தப் பேச்சை நீங்கள் பேசினாலும் உண்மையான உள்ளத்துடன் அதை பேச வேண்டும். உங்களது செயல்களும் அதற்கேற்ப இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் இருந்தால் அது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. இதன் மூலமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை தெரிய வருகிறது. ஏனென்றால் எத்தகு வெற்றி மற்றும் உள்ளங்களில் நல்விளைவை ஏற்படுத்துதல் ஆகியவை பங்கில் வந்ததோ அதற்கு இணையான ஒன்று ஆதமின் சந்ததிகளின் வரலாற்றில் நமக்கு கிடைக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொல்லிலும் செயலிலும் முழுமையான பொருத்தம் இருந்ததன் காரணமாகவே அது நடந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை சரியான முறையில் பின்பற்றிச் செல்ல முயற்சி செய்வது நமது கடமையாகும். நமது சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கும் போதுதான் அதை நாம் செய்ய முடியும். அப்போதுதான் நமது முயற்சிகளுக்கான சிறந்த பழங்களும் கிடைக்கும். அல்லாஹ் நமக்கு ஹஸரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! நாம் மார்க்கத்தைப் பரப்பக்கூடியவர்களாக ஆவோமாக! மக்களுக்கு நேரான வழியைக் காட்டக்கூடியவர்களாக நாம் ஆவோமாக! அவர்களது உறுப்புகளாக இருப்பதற்குரிய உரிமையை செலுத்தக்கூடியவர்களாக நாம் ஆவோமாக! நமது சொல்லிலும் செயலிலும் எவ்வித முரண்பாடும் இல்லாமல் இருக்கட்டுமாக! ஒருபோதும் தஜ்ஜாலிய ஆற்றல்கள் மற்றும் உலக அறிவுகளின் ஆதிக்கத்தின் கீழ் நாம் வராமல் இருப்போமாக! அல்லாஹ் இந்த அடிப்படையான விஷயத்தைப் புரிந்து கொள்வதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

இன்று மீண்டும் நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். நைஜரிலுள்ள அகாதேஸ் பகுதியின் அரசரின் ஜனாஸாவாகும். இவர் பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதி தமது 75 வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவரது பெயர் அல்ஹாஜ் உமர் இப்ராஹீம் ஆகும். 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இவருக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இவர் நைஜர் உடைய மிகப்பெரும் அரசராவார். மரபு வழியில் வந்த அனைத்து ஆட்சியாளர்களுக்கும் இவர் தலைவராக இருந்தார். குடியரசுத் தலைவரின் உயர்மட்ட சிறப்பு ஆட்சிக் குழுவிலிருந்த நான்கு நபர்களில் இவரும் ஒருவராவார். நைஜரில் 15 வது நூற்றாண்டிலிருந்து அகாதேஸ் பகுதியில் ஆட்சி ஆரம்பமானது. 1960 ஆம் ஆண்டில் மர்ஹூம் அகாதேஸ் பகுதியின் அரசராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 51 அல்லது 52 வருடங்களாக இவர் அரசராக இருந்து வந்துள்ளார்கள். நைஜரின் மக்கள் இவரை கண்ணியமான பார்வையால் பார்த்தனர். அகாதேஸில் அவ்வப்போது கூச்சல் குழப்பம் நிலவிய பகுதிகளில் அமைதியை ஏற்படுத்துவதில் இவருக்கு பெரும் பங்கு இருந்தது. அமைதியின் அடையாளமாக இவர் திகழ்ந்தார்.

2002 -ல் பெனினில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் 12 பேர் அடங்கிய தனது குழுவுடன் 2500 கிலோ மீட்டர் பயணம் செய்து வந்து கலந்து கொண்டார். ஜல்ஸாவிற்குப் பிறகு ஒரு வாரம் பெனினில் தங்கியிருந்தார். பெனினின் அமீர் சாஹிபுடன் பல ஜமாஅத்துகளுக்குச் சென்றார். அஹ்மதிய்யத்தை மிக அருகில் சென்று பார்க்க அவரால் முடிந்தது. நைஜருக்குத் திரும்பிச் செல்வதற்கு முன் நான் பைஅத் செய்து விட்டு திரும்பிச் செல்ல விருப்புகின்றேன் என்ற தனது ஆசையை வெளிப்படுத்தினார். பிறகு தனது 12 உறுப்பினர்களைக் கொண்ட தனது குழுவினருடன் சேர்ந்து பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தார்.

பெனின் ஆண்டு மாநாட்டில் ஆயிரக்கணக்கான நபர்கள் தொழுவதைப் பார்த்துவிட்டு எனது உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. நாங்கள் முஸ்லிம் நாட்டிலிருந்து வந்துள்ளோம். முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக இருக்கின்ற இது போன்ற மாநாட்டை நாங்கள் ஒருபோதும் பார்க்கவில்லை என்று அவர் கூறினார். 2003 ஆம்

ஆண்டில் U.K. ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார். அப்போது என்னுடன் இவரது முதல் சந்திப்பு நிகழ்ந்தது. மிக நல்ல ஒழுக்கமுடையவராகவும் எல்லாரிடமும் நல்ல முறையில் பரிமாறக்கூடியவராகவும் பல நற்பண்புகளின் எஜமானராகவும் இவர் திகழ்ந்தார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹின் வஃபாத் தொடர்பாக இவருக்குத் தெரிய வந்ததும் மிஷன் ஹவுஸிற்கு தாமாகவே வந்து முபல்லிக் இன்சார்ஜ் இடம் தனது அனுதாபத்தை தெரிவித்தார்.

இவருக்கு சந்ததிகளும் உள்ளனர். 18 மகன்களும் 12 மகள்களும் உள்ளனர். இவர்கள் 4 அல்லது 5 பேருக்கு திருமணம் முடிந்து விட்டது.

நைஜர் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிபான அக்பர் அஹ்மது சாஹிப் கூறுகின்றார்கள். அவர்களுக்கு இருமுறை அகாதேஸ் செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது சுல்தான் அவர்கள் சிறந்த முறையில் விருந்தோம்பல் செய்தார். மிஷனரி இன்சார்ஜிற்கு நல்ல முறையில் விருந்தோம்பல் செய்தார். அவருக்கு கண்ணியமளித்து வந்தார். நாட்டின் தலைநகரமான மியான்மீருக்கு வரும் போது இந்த எளிவனுக்கு அது பற்றி தெரிய வந்தது. நான் அவர்களைச் சந்திக்கச் செல்லும் போது மிகுந்த அன்புடன் என்னைச் சந்தித்தார். என்னிடம் ஜமாஅத்தின் நிலைமைகள் பற்றி கேட்பார்கள். கலீஃபத்துல் மஸீஹ் பற்றி கேட்பார்கள்.

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான் பெனினில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது இவர்கள் மீண்டும் பக்கத்து நாடான கராக்கோவிற்கு வந்தார்கள். நைஜரிலிருந்து 62 பேர் கொண்ட குழு வந்திருந்தது. அந்த குழுவில் மர்ஹூம் அகாதேஸின் சுல்தானாகவும் இருந்தார்கள். அங்கு 3 அல்லது 4 நாட்கள் பயணம் செய்துதான் நான் வந்துள்ளேன் என்று அவர் கூறினார். பாலைவனத்தில் பயணமும் மிகவும் கடினமான ஒன்றாகும். 2000 அல்லது 2500 கி.மீ. பயணம் செய்து இவர் அங்கு வந்து சேர்ந்தார். அங்கு இவரோடு பல விஷயங்கள் பேசப்பட்டன. இவர் புகைப்படமும் எடுத்து கொண்டார். என்னை சந்தித்ததில் அவருக்கு மிகுதியான மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் சுல்தானாக இருந்தும், மிகப்பெரும் சுல்தான்களில் ஒருவராக இருந்தும், மிகுந்த பணிவும் அடக்கமும் இவரிடம் இருந்தது. அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 16.03.2012

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456